செய்தி வெளியீடு எண் : 537 நாள் : 07.03.2025

# செய்தி வெளியீடு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அரசாணை (நிலை) எண்.187, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.11.1995–இல், ஆதிதிராவிடர்களின் நலனைப் பேணவும், அவர்களுக்கான திட்டங்களை கண்காணிக்கவும், ஆலோசனை வழங்கவும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நலக்குழு மாற்றி அமைக்கப்பட்டு, இறுதியாக ஏப்ரல் 2017–இல் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு திருத்தி அமைக்கப்பட்டு, மார்ச் 2020–வரை செயல்பட்டு முடிவுற்ற நிலையில், 2021–ஆம் ஆண்டு மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **"தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம்"** என்கிற புதிய அமைப்பு ஒற்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம் 2021–ஆம் ஆண்டு இயற்றப்பட்டதால், ஏற்கனவே செயல்பட்டு வந்த மாநில அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழுவிற்கு நீட்டிப்பு வழங்க அவசியம் எழவில்லை. தற்போது இந்த ஆணையம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் நலனைப் பேணவும் மற்றும் கண்காணித்து, ஆலோசனைகள் மற்றும் தீர்வுகளையும் இவ்வாணையம் உரிய முறையில் வழங்கி சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

அரசு செயலாளர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu